2008 ஏப்ரல் 10]

அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றபொழுதுதான் அதற்கொரு முடிவு காணப்பட்டு, அந்தச் சாலைகள் தற்பொழுது நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்பாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் இருந்தாலும் சரி, அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில், அவை ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலைகளாகவும் இல்லாமல், நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளாகவும் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார். அவை ஊராட்சி ஒன்றியத்தினுடைய சொத்துக்கள்தான். நெடுஞ்சாலைத் துறை பல்வேறு திட்டங்களை எடுத்துப் பராமரிக்கின்ற நேரத்தில், பொது மக்களும், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளும் உடனடியாக நெடுஞ்சாலைத் துறையை அணுகிவிடுங்கள் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் நெடுஞ்சாலைத் துறையிடம் வருகின்ற நேரத்தில், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பினுடைய சாலை; நாங்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ் பராமரித்தோம்; அதை மேம்படுத்தினோம்; எனவே, அவர்களிடமே போய் அதைப் பராமரித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இந்தச் சிக்கல் கடுமையாக இருந்தது. ஆனால், இரண்டாண்டுகளுக்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின்பேரில் அந்தச் சாலை சீர்செய்யப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அதற்கேற்ப எதிர்காலத்திலே முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

88—

புதிய கட்டடம்

***538—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் நகராட்சியில் கால்நடை மருத்துவமனைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராஜபாளையம் நகராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனை 1931 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மருத்துவமனையாகும். மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஆகவே, அதற்காக நபார்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விரைவில் கட்டித் தரும்படி இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, வினா எண் 90 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) தூத்துக்குடி, ஒட்டப்பிடாரத்தில் வயிற்றுப் போக்கினால் சிலர் பாதிக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடி அருகே 5 கிராமங்களில் சுத்தம் செய்யப்படாத தண்ணீரைப் பருகிய 150 பேர் வாந்தி, பேதியால் பாதிக்கப்பட்டுப் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டது